**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**

**EA.No.2/2023 in E.P.No.11/2020 in R.C.O.P.No. 4/2007**

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | : | நீ.ம.சா.1 |
| Name | : | முருகன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | |
| Occupation | : | சங்கரன்கோவில் நகராட்சி வருவாய் ஆய்வாளர் |
| Date | : | 06.01.2026 |

**முதல் விசாரணை :**

நான் சங்கரன்கோவில் நகராட்சி வருவாய் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். சங்கரன்கோவில் நகராட்சி ஆணையராளருக்கு இந்நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையின் பேரில் சங்கரன்கோவில் நகராட்சி ஆணையராளரால் வழங்கப்பட்ட அதிகார கடிதத்தின் மூலமாக இன்று இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். **மேற்படி அதிகார கடிதம் நீமசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னால் இந்நீதிமன்றத்தில் 26.09.2025 அன்று சங்கரன்கோவில் நகராட்சி அலுவலகத்தில் இருந்து தகதாமனுவில் கண்ட சொத்தைப் பொறுத்து கடந்த 2001-2002 மற்றும் 2012 மற்றும் 2016 நிதி ஆண்டுகளுக்கான சொத்து வரி பதிவேடு உண்மை நகல் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டது. **மேற்படி தகதாமனுவில் கண்ட சொத்தைப் பொறுத்து கடந்த 2001-2002 மற்றும் 2012 மற்றும் 2016 நிதி ஆண்டுகளுக்கான சொத்து வரி பதிவேடு உண்மை நகல் ஆவணங்கள் நீ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை முடிக்கப்படுகிறது.**

**மனுதாரர் மற்றும் 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆஜர் இல்லை. மனுதாரர் மற்றும் 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.01.06 17:27:25 +0530